1975 ஏப்ரல் 10]

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு 1½ ஆண்டுக்காலமாக இயங்கவில்லை. இதற்குக் காரணம் அதைக் கட்டி முடித்த "ஒப்பந்தக்காரர் அதிலேயுள்ள பம்பு செட்டை எடுத்துக்கொண்டு சென்று விட்டார் என்ற காரணத்தால் அது இயங்கவில்லை என்று கூறப்படுகிறதே, அதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை மேற்கண்ட வினா மீது கோரப்பட்டது. அரிசன நல இலாகா மூலம் ஒரு தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப் பட்டிருக்கிறது என்றும், தேவையான குழாய்களும், பம்பு செட்டுகளும் வாங்கப்பட்டுள்ளன என்றும், மின்சாரத் தொடர்பு கிடைக்காததினால் வேலை முடங்கியிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். மின்சார வாரியத் துடன் தொடர்பு கொள்ளப்பட்டு சீக்கிரம் முடிக்கப்படும் என்றும் கூறி யுள்ளார்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, கட்டி முடிக்கப்பட்டு இயங்க ஆரம்பித்த பிறகு ஒப்பந்தக்காரர் எடுத்துச் சென்று விட்டார் என்று நான் சென்று பார்த்த பொழுது கூறினார்கள். அதுதான் உண்மை என்று கருதுகிறேன். எனவே மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அப்படியானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும், குறுகிய கால வினாக்களுக்கும் பதில் அளிப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதிமுறைகளின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் கள் சில அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த காரியங்களைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் விதி 42-இன் கீழ் அல்லது விதி 41-இன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமும் கொண்டு வருகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் மிக முக்கியமான விஷயங்களைப் பற்றிக் குறுகிய கால கேள்விகளையும் அனுப்புகிறோம். நான் இப்படி விதி 41-இன கீழ் இரண்டு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த

(Mr. Speaker sounded the gong) I am not going into the matter. இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். ஒரு குறுகிய காலக் கேள்வியையும் கொடுத்திருக்கிறேன். ஏறத்தாழ அவற்றை கொடுத்து 3 வார காலம் இருக்கும் என்று நினைக்கிறேன். இன்னும் அந்தக் கேள்விக்குப் பதில் வரவில்லை, கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. சட்டமன்றத் துறையிலே உள்ளவர்கள், கொடுத்த கேள்வியையும், நாங்கள் கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் சட்டமன்றத்தின் விதிமுறைகளில் அதற்கு ஒரு கால வரையறை, லிமிடேஷன் இல்லாததால் நீண்டுகொண்டே போகிறது. எனவே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக குறுகிய கால வினாக்களுக்கும் கவன ஈர்ப்பு தீர்மானங்களுக்கும் அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நம்முடைய பேரவை தலைவரவர்கள் விதியை மாற்றியமைக்க....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அப்படிக் கொடுங்கள.

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்கள் அமைச்சர்களுக்கு லிமிடேஷன், காலவரையறை கொடுக்கலாம், இத்தனை நாட்களில் கொடுக்க வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவைப் போட்டால் உதவிகரமாக இருக்கும். இன்னும் ஐந்தாறு நாட்களுக்குத்தான் சட்டமன்றக் கூட்டம் நடக்க இருக்கிறது. எனவே. நாங்கள் எழுப்பிய முக்கியமான பிரச்சினைகளுக்குக் கூடிய விரைவில். பதில் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம், மாண்புமிகு அமைச்சரவர்கள் வந்திருந்தால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும். அவர்கள் வரும் வழியில் வண்டி இடையிலே நின்றுவிட்டதால் வர முடியவில்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தால் அது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும்.

திரு. கு. காமாட்சி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய அவையிலே கேள்வி நேரத்தின்போது நாங்கள் எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரையும் எழுப்ப அனுமதிப்பதில்லை. ஆனால் இன்றைக்கு நம்முடைய விதிகளுக்கு மாறாக தாங்கள் திரு. சுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டரை அனுமதித்திருக்கிறீர்கள். இந்த முறையை இனி மேலும் அனுமதிக்கப் போகிறீர்களா அல்லது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காமாட்சி அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கு வரும் என்று கருதுகிறேன்.